**கட்டுநாயக்கா சீதுவ நகர சபை**

**கம்பஹா மாவட்டம்**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 செப்ரம்பர் 09 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஜனவரி 10 இல் சபையின் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2 பாதகமான அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கட்டுநாயக்கா சீதுவ நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் காசுப்பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்தவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டுள்ளன.

**(அ)** மீளாய்வாண்டில் ரூபா 318,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட 03 கணனிகளில் கணக்குகளில் ரூபா 3,180,000 ஆகவும் ரூபா 110,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட 02 விரல் அடையாள இயந்திரம் ரூபா 11,100 ஆகவும் கணக்குகளில் காட்டப்பட்டமையால் ரூபா 2,763,100 ஆல் மொத்த ஆக்கப் பொருட்செலவீனமும் நிலையான சொத்துக்கள் கணக்கும் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது.

**(ஆ)** பெறவேண்டிய ஏனைய வருமானங்கள் டிசெம்பர் 31 இல் கணக்குகளைச் சீராக்கும் போது ரூபா 207,795 ஆல் கூட்டிக்காட்டப்பட்டுள்ளது.

**(இ)** சபையின் வருமானப் பதிவேடுகளில் டிசெம்பர் 31 இல் உள்ள 5 வருமானங்கள் காசு அடிப்படையில் கணக்குகள் பராமரிக்கப்பட்டு வந்தமையினால் கிடைக்க வேண்டிய வருமதிகள் காட்டப்பட்டிருக்கவில்லை ஆனாலும் கிடைக்க வேண்டிய வருமதிகள் கணக்குகளின் படி ரூபா 3,419,319 மீதியாகக் காட்டப்பட்டுள்ளது.

**(ஈ)** இறைச்சிக்கடை வாடகை வருமானப் பற்றுச்சீட்டுக்கள் பதிவேடுகளின் பிரகாரம் ரூபா 893,535 ஆகக் காட்டப்பட்ட போதிலும் கணக்குகளில் ரூபா 1,123,535 ஆகக் காட்டப்பட்டமையால் ரூபா 230,000 கூட்டிக்காட்டப்பட்டுள்ளது.

**(உ)** உதவி தொழிற்திணைக்களத்தின் 2015 மார்ச் 31 ஆந் திகதி கடிதத்தின் பிரகாரம் 2004 ஆம் ஆண்டு தொடக்கம் 2011 ஆம் ஆண்டு காலப்பகுதி வரை செலுத்தப்பட வேண்டிய ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் மேலதிகக் கட்டுப்பணம் ரூபா 12,363,015 ஆனது கணக்குகளில் நிகழத்தக்க பொறுப்பு மாதிரி குறிப்புக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

**(ஊ)** உள்ளுராட்சி உட்கட்டுமானத் திட்டக் கடிதத்தின் பிரகாரம் 3 திட்டங்களில் டிசெம்பர் 31 இல் ரூபா 17,755,719 செலுத்த வேண்டியதாக கணக்குகளில் காட்டப்பட்ட போதிலும் உள்ளுராட்சி உட்கட்டுமானத் திட்டக் கடன் நிதியத்தின் ஆவணத்தின் பிரகாரம் ரூபா 17,147,708 எனக் காட்டப்பட்டமையால் சபையின் கணக்குகளில் ரூபா 608,011 கூடுதலாக காட்டப்பட்டுள்ளது. மேலும் மேற்படி கடனுக்காக செலுத்த வேண்டிய வட்டி ரூபா 399,504 கூடுதலாக கணக்குகளில் காட்டப்பட்டுள்ளது.

**(எ)** சமர்ப்பிக்கப்பட்ட பதிவேடுகளின் படி மின்சாரக் கணிப்பான் வாங்குவதற்காக தனியார் நிறுவனம் ஒன்றிற்குச் செலுத்த வேண்டிய ரூபா 77,700 கணக்குகளில் ரூபா 777,000 ஆகவும் பெறவேண்டிய ரூபா 700,300 செலுத்தவேண்டியதாகவும் கணக்குகளில் காட்டப்பட்டமையால் மொத்த சென்மதியாளர் ரூபா 749,300 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது.

**(ஏ)** 2015 டிசெம்பர் 31 ஆம் திகதியில் ரூபா 843,286 பெறுமதியான ஆயுள்வேத மருந்துகள் இருப்பும் ரூபா 6,333,572 பெறுமதியான நூலகப்புத்தகங்களும் கணக்குகளிற்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

**(ஐ)** 2015 அம் ஆண்டுக்கான மொத்த நீர் வரிப்பட்டியல் ரூபா 17,357,233 ஆகக் காட்டப்பட்ட போதிலும் வருமானக் கணக்குகளில் ரூபா 22,421,422 ஆகக் காட்டப்பட்டமையால் ரூபா 5,064,189 ஆல் அதிகரித்துக்காட்டப்பட்டுள்ளது.

### 1.3.2 தொங்கல் கணக்கு

-----------------------

சமர்ப்பிக்கப்பட்ட மீளாய்வாண்டின் கணக்குகளின் ஐந்தொகை குறிப்பு 10 இல் 2014 ஆம் ஆண்டு தொங்கல் கணக்கு மீதியாக ரூபா 337 மட்டும் காட்டப்பட்டிருந்தது. இருந்த போதிலும் 2014 ஆம் ஆண்டில் ஆரம்ப மீதியில் உள்ள வித்தியாசமாக ரூபா 11,718,181 ஆகவும் 2015 ஆம் ஆண்டிற்கான வித்தியாசம் ரூபா 592,382 ஆகவும் மேலதிகமாகக் காட்டப்பட்டிருந்தமையினால் மீளாய்வாண்டு கணக்கில் தொங்கல் கணக்கு இறுதி மீதி மேலும் ரூபா 12,310,900 ஆன தொகை மேலதிகமாக இருந்தது. பேரேடுகளின் பிரகாரம் குறித்த தொங்கல் கணக்கு மீதியானது கணக்குகளில் காட்டப்பட்டிருக்கவில்லை இருந்த போதிலும் 31 டிசெம்பர் 2016 வரை இக் கணக்கை சீர் செய்வதற்காக நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

-------------------------------------------------------------------

மீளாய்வாண்டின் இறுதிக் கணக்குகளில் செலுத்த வேண்டிய பெறுமதி சேர் வரி ரூபா 6,363,425 பொய்யான தகவல்களின் அடிப்படையில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் சீர் செய்வதற்கு நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் மீளாய்வாண்டில் 3 வகையான 6 வியாபார நிலையங்களினால் சபைக்குக் கிடைக்க வேண்டிய அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா 93,925 ஆன தொகையை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 சமப்படுத்தப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

-----------------------------------------------------

பின்வரும் விபரங்கள் அவதானிக்கப்பட்டுள்ளது.

(அ) 2015 டிசெம்பர் 31 ஆம் திகதியில் 17 வகையான வருமானக் கணக்குகளின் படியான மீதியும் பேரேடு மற்றும் உபபேரேடுகளின் படியான மீதியும் ரூபா 71,754,819 ஆல் வித்தியாசமாக உள்ளது.

(ஆ) 2015 டிசெம்பர் 31 இல் பரீட்சை மீதி சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றின்மை

கூட்டுமொத்தத் தொகையான ரூபா 45,390,985 பெறுமதியான 09 கணக்குகளிற்கான உபபேரேடுகள் மற்றும் விபரங்கள் சமர்ப்பிக்கப்படாமையினால் முறையாகக் கணக்காய்வு செய்யமுடியாதுள்ளது.

### 1.3.6 சட்டங்கள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்கள் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(அ) 1988 ஏப்பிரல் 20 ஆம் திகதிய 88/20 உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் கடிதத்தின் பிரகாரம் ரூபா 10,066,575 ஆன இரண்டு நிலையான வைப்புக்களை மீள எடுக்கும் போது உள்ளூராட்சி ஆணையாளரின் அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிப்பிரமாணம் 135 இன் பிரகாரம் அதிகார கையளிப்பு வழங்கப்பட்டிருக்கவில்லை. நிதிப்பிரமாணம் 139 (10) இன் பிரகாரம் காசோலை பரிமாற்றம் செய்கையில் வங்கி மீதி உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே காசோலை வரைதல் வேண்டும் இருப்பினும் வங்கி மீதி உறுதிப்படுத்தாமையால் 2015 நவம்பர் 30 ஆம் திகதிய மக்கள் வங்கிக் கணக்கின் பிரகாரம் ரூபா 4,183,109 ஆன தொகையால் மேலதிக பற்று மீதியாக உள்ளது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2015 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செயற்பாடுகளின் பெறுபேறு மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமான மிகையாக ரூபா 18,109,878 ஆக விளைந்திருந்ததுடன் ஒப்பிடும்போது நேரொத்த முன்னைய ஆண்டில் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமான மிகையாக ரூபா 41,139,611 ஆக விளைந்திருந்தது.

### 2.2 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

நடைமுறை விகிதம் 2:1 ஆக இருக்க வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிலும் ஒப்பிடும் போது நேரொத்த முன்னைய ஆண்டிலும் முறையே 1.77:1 ஆகவும் 0.92:1 ஆகவும் காட்டப்பட்டிருந்தமையினால் நகர சபையின் திரவத்தன்மை மிகவும் பலவீனமாக காணப்படுகின்றது.

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உண்மை வருமானம் மற்றும் கிடைக்கவேண்டிய வருமானம்

மீளாய்வாண்டிற்காக மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் கிடைக்கவேண்டிய வருமானம் என்பவற்றின் விபரம் பின்வருமாறு.

| | வருமான விடயம் | பாதீடு (ரூபா) '000 | உண்மை (ரூபா) '000 | டிசெம்பர் 31 மொத்த நிலுவை (ரூபா) '000 |
|---|---|---|---|---|
| (i) | ஆதனவரி | 108,572 | 110,874 | 83,385 |
| (ii) | வாடகை | 7,433 | 10,864 | 3,298 |
| (iii) | உரிமங்கள் | 4,084 | 2,502 | 100 |
| (iv) | ஏனைய வருமானம் | 48,031 | 40,890 | 3,474 |

### 2.3.2 ஆதனவரி

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளது.

(அ) 2015 ஆம் ஆண்டு இறுதிக் காலப்பகுதியில் கிடைக்க வேண்டிய ஆதனவரி சேகரிப்பு மிகவும் பலவீனமாக இருந்தது. 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வரை 45 வீதமான ரூபா 37,319,669 மட்டுமே சேகரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 31 டிசெம்பர் 2015 இல் ஆதனவரி இடாப்புக்கள் மற்றும் கணக்குகளின் படி ரூபா 17,514,599 வித்தியாசமாக இருந்தது. இருப்பினும் வித்தியாசத்தை கவனத்தில் எடுக்காமல் 2016 ஆம் ஆண்டில் ஆதனவரி பதிவேடுகளில் முழுமையாகப் பயன்படுத்தாமல் கணனித் தொகுதி மூலம் கணனி மயப்படுத்தி உள்ளார்கள்.

### 2.3.3 கடை வாடகை

சீதுவ புதிய கட்டிடத் தொகுதியில் 18 கடைகளிற்கு கடை வாடகையாக 2009 டிசெம்பர் 09 ஆந் திகதிய அரசாங்க விலை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டில் 50 வீதம் மட்டுமே சேகரிப்பட்டுள்ளது. ஆனாலும் 2014 ஆம் ஆண்டில் விலை மதிப்பீடானது 5 வருடங்களைக் கடந்துள்ளபோதும் மீளாய்வாண்டு வரை மீதியானது சேகரிப்பட்டிருக்கவில்லை.

### 2.3.4 உரிமங்களும் வியாபார வரிகளும்

நகர சபை எல்லையில் இருக்கின்ற பிரசித்தி பெற்ற உடுப்பு தயாரிக்கும் நிறுவனத்திடமிருந்து மீளாய்வாண்டிற்கான உரிமம் சேகரிக்கப்பட்டிருக்கவில்லை மற்றும் இலங்கை உல்லாச பிரயாணிகள் சபையின் விதிப்படி பதிவு செய்யப்பட்ட 07 உணவகங்கள் மற்றும் விடுதிகள் மீளாய்வாண்டிற்கான அனுமதிப் பத்திரக் கட்டணம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.4 வங்கி கணக்குகள்

(அ) 2014 டிசெம்பர் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றின்படி 2014 டிசெம்பர் 31 ஆந் திகதிக்கு காசேட்டு மீதி 23,631,773 ஆகக் காட்டப்பட்டிருந்த போதிலும் 2015 ஜனவரி மாதத்திற்கான வங்கி கணக்கிணக்கக் கூற்றின் படி 2015 ஜனவரி 01 இன் பிரகாரம் காசேட்டு மீதி ரூபா 23,632,608 ஆகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) காசேட்டில் பதியப்படாத நேரடியாக வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 2,971,687 உம் வங்கியில் மேலதிகமாக வைப்புச் செய்யப்பட்ட ரூபா 5,723 உம் குறைவாக வைப்புச்

செய்யப்பட்ட ரூபா 67,431 உம் இணங்காணப்பட்டு தீர்வு செய்யப்பட எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2015 பெப்ரவரி மற்றும் நவம்பர் மாதத்தில் செய்த மொத்தக் கொடுப்பனவு வங்கி கணக்கிணக்கக் கூற்றின் அந்தந்த மாதக் கொடுப்பனவுகள் முறையே ரூபா 27,760,608 உம் ரூபா 20,900,090 உம் ஆகக் காட்டப்பட்டிருந்த போதிலும் கொடுப்பனவு காசேட்டின் படி அந்தந்த மாத மொத்த கொடுப்பனவுகள் முறையே ரூபா 26,752,971 ஆகவும் ரூபா 20,896,500 ஆகவும் காட்டப்பட்டிருந்தது.

**2.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

-----------------------------------

கழிவு நீர் அகற்றல் திட்டம் மற்றும் நூலகத் திட்டத்திற்கான உள்ளுர் கடன் அபிவிருத்தி நிதியம் இனால் முறையே வழங்கப்பட்ட ரூபா 8,332,123 உம் ரூபா 18,058,218 உம் கடனிற்காக செலுத்த வேண்டிய தவணைக் கட்டணம் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகள் 2014 ஆம் ஆண்டு வரை முறையாக செலுத்தப்படாமையினால் 2015 டிசம்பர் 31 இற்கு தண்டம் மற்றும் பிந்திய கொடுப்பனவு கட்டணங்கள் முறையே ரூபா 71,219 உம் ரூபா 229,941 உம் ஆகக் காணப்பட்டது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

--------------------------

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை**

--------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளது.

(அ) தற்போது பாவனையற்ற 03 கிணறுகளிற்காக காவலாளியாக 06 தொழிலாளிகளை நியமித்தமையினால் மீளாய்வாண்டில் ரூபா 1,568,886 சம்பளமாக வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) 2015 டிசெம்பர் 31 ஆந் திகதிக்கு வாகனங்கள் வண்டிக் கணக்கின் 12 வகையான 61 பொருட்களின் பெறுமதி ரூபா 636,595 பொருட் கணக்கெடுப்பின் போது வேறுபடுத்தப்பட்டுள்ளது. ஆனால் அவை தொடர்பாக எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மை**

--------------------------------------

(அ) சில்லறைக் கடன் வருமதிக் கணக்கு பதிவேடு இலக்கங்கள் 11801, 11851, 11901 மற்றும் 11951 காணாமல் அக்கப்பட்டதாக இனங்காணப்பட்ட போதிலும் இப்பதிவேடுகள் தொடர்பாக எவ்விதமான நடவடிக்கையும் முகாமையால் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 ஆம் ஆண்டு சபை செயற்திட்ட அறிக்கையில் உள்ள 07 திட்டங்கள் மீளாய்வாண்டில் நடைமுறைப் படுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.3 திண்மக்கழிவு முகாமைத்துவம்**

------------------------------------

**சீதுவ அம்பலன்முல்ல எனும் இடத்தில் உள்ள குப்பைகளை பரவுதல்**

-----------------------------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) இந்த குப்பைகளைப் பரவுவதற்கு 2014 ஒக்ரோபர் 01 ஆம் திகதியிலிருந்து 2015 செப்டெம்பர் 30 ஆம் திகதி வரைக்கும் ஒரு மாதத்திற்கு ரூபா 168,000 செலுத்துவதற்கு உடன்படிக்கை செய்யப்பட்ட போதிலும் கேள்வி கோரும் நடவடிக்கை பின்பற்றப்படாமல் முதலில் கொடுத்த நபருக்கே தொடர்ச்சியாக வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) குப்பை போடும் இடத்திற்கான அனுமதி சுற்றுச்சூழல் அமைச்சிடம் இருந்து பெறப்படாது குறித்த குப்பை மேட்டில் எவ்வளவு அளவு குப்பை உள் வருகின்றது என்ற பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. குப்பைகள் பரவுவதற்கு பாவிக்கும் இயந்திரம் திருத்தத்திற்கு அனுப்பும் போது அந்த நாட்களில் குப்பை பரவுவது தொடர்பான ஏற்பாடு உடன் படிக்கையில் செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) உடன்படிக்கை நிபந்தனைகளின் பிரகாரம் குப்பை மேட்டிற்கு வரும் 30 உழவு இயந்திர லேட் குப்பைகள் நாளாந்தம் பரவி முறையாகப் பேணப்படல் வேண்டும். ஆனாலும் 2015 ஒக்டோபர் 08 ஆம் திகதிய கணக்காய்வு அவதானிப்பின் போது குப்பை பரவுதல் சரியான முறையில் செய்யப்பட்டிருக்கவில்லை. அதனால் பரவிய குப்பைக்கு மேல் மண் பரவுதல் நடைபெறவில்லை எனக் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

## 3.4 ஒப்பந்த முகாமைத்துவம்

------------------------------

### 3.4.1 றொபின் பெர்னான்டோ மாவத்தை தாரிட்டு பராமரித்தல்

-----------------------------------------------------------------------

றொபின் பெர்னான்டோ மாவத்தை றோட்டை தாரிட்டு பராமரிப்பதற்காக ரூபா 1,709,199 ஆனது 2014 ஏப்ரல் 03 ஆந் திகதி ஒப்பந்தம் செய்யப்பட்டபோதிலும் சபையின் நிதிப்பற்றாக்குறை காரணமாக 08 மாதங்களின் பின் மேற்படி வேலையினை ஆரம்பித்தமையால் றோட்டில் குழிகள் மேலதிகமானமையால் முதல் மதிப்பீட்டிற்கு மேலதிகமாக 27 கியூப் கிரவல் பரவ வேண்டி ஏற்பட்டுள்ளது. இதனால் ரூபா 90,364 கொடுப்பனவு மேலதிகமாக ஏற்பட்டுள்ளது.

### 3.4.2 லியனகேமுல்ல பிரதேசத்தில் தனியார் நிறுவனம் ஒன்றில் நகரசபை காணி கொள்வனவு

---------------------------------------------------------------------------------------------------------

காணி விற்கும் கம்பனி லியனகேமுல்ல கிராமத்தில் ஏலத்தில் விடப்பட்ட காணியில் பொது நோக்கத்திற்காக சட்டப்படி சபைக்கு வழங்கப்பட்ட காணித்துண்டு இலக்கம் 15 இல் 30 பேர்ச்சஸ் காணியினை சபை சரிவர பராமரிக்காமையினால் தனியார் நிறுவனம் இந்த நிலத்தை பயன்படுத்தி சுற்றுமதில் அடைத்துள்ளது. 2012 ஒக்டோபர் 30 ஆந் திகதியில் நடைபெற்ற மாதாந்த கூட்டத்தில் எடுத்த தீர்மானத்தின் படி 30 பேர்ச்சஸ் காணித்துண்டில் 15 பேர்ச்சஸ் நடைமுறைச் சந்தை விலையின் விற்று பணம் பெறப்பட்டு மீதி 15 பேர்ச்சில் பொது நோக்க மண்டபமும் விளையாட்டு மைதானமும் பொது வேலைகளாக செய்யப்பட இருந்த போதிலும் மேற்படி வேலையை முடிக்காமல் மொத்தக் காணியையும் ரூபா 3,000,000 இற்கு 2015 செப்டெம்பர் 11 ஆந் திகதி விற்கப்பட்டு பணம் பெறப்பட்டுள்ளது. 2013 ஆகஸ்ட் 08 ஆந் திகதி ரூபா 3,000,000 பெறுமதி கணிக்கப்பட்ட தொகை 2015 செப்டெம்பர் 11 ஆந் திகதி கிடைத்தமையினால் சபைக்கு மேலதிக நட்டம் ஏற்பட்டுள்ளது.

### 3.4.3 சபைக்கு சொந்தமான உழவு இயந்திரத் திருத்த வேலை

------------------------------------------------------------------------

சபைக்குச் சொந்தமான உழவு இயந்திரம் 2012 யூலை 02 இல் தனியார் நிறுவனம் ஒன்றில் திருத்தத்திற்காக விடப்பட்டிருந்தது. அந்த நிறுவனம் ரூபா 670,406 செலவு ஏற்படும் என மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்ட போதிலும் சபையினால் மேற்படி திருத்தத்திற்கு அனுமதி வழங்கப்படவில்லை. திருத்த வேலைகள் இயந்திரப் பொறியியலாளரின் சிபாரிசின் படி இந்த மதிப்பிடு கூடுதலாக காணப்பட்டமையினால் இந்த உழவு இயந்திரம் ரூபா 780,000 இற்கு விற்பனை செய்வது நல்லது என முடிவு எடுக்கப்பட்ட போதிலும் 2016 ஒக்டோபர் 04 ஆந் திகதி வரைக்கும் அந்த உழவு இயந்திரத்தை சபைக்கு கொண்டு வர ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. அத்துடன் திருத்த நிறுவனம் சபைக்கு 2015 நவம்பர் 11 ஆந் திகதி அனுப்பிய நீதிமன்றக் கட்டளைப்படி 03 வருடம் 07 மாதம் 15 ஆம் திகதிக்காக ஒவ்வொரு நாளிற்கு ரூபா 100 இன்படி கட்டணம் செலுத்தி உழவு இயந்திரத்தை எடுப்பதற்கு தகவல் தரப்பட்டுள்ளது. தற்போது மேற்படி திருத்த நிறுவனம் பழைய இடத்தில் காணப்படாமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

------------------------------------------

பின்வரும் விடயங்களில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது

(அ) கணக்கீடு
(ஆ) உள்ளகக் கணக்காய்வு
(இ) மதிப்பீட்க் கட்டுப்பாடு
(ஈ) வருமானக் கட்டுப்பாடு
(உ) மனிதவள முகாமைத்துவம்
(ஊ) ஒப்பந்த முகாமைத்துவம்